# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 117 இதழ்: 21 22-11-1991 ( நவ. 22 — டிச. 06 ) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50


## யூபிலி ஆண்டு

யாழ் ஆயர் பேரருள்திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் 1991 டிசம்பர் 22 அன்று தனது குருத்துவத்தின் 50 ஆண்டு நிறைவையும் 1992 ஏப்ரல் 9இல் 75வது பிறந்ததினத்தையும் 1992 மே 11ஆம் திகதி ஆயர் திருநிலைப்படுத்தலின் 25வது ஆண்டு நிறைவையும் நினைவு கூருகிறார்.

### கற்பைக் காக்க உயிரைத் தியாகம் செய்த மரிய கொறற்றி பற்றி திருத்தந்தை

# வாழ்க்கைப் பயணம் இவ்வுலகுக்கு அப்பால் தொடர்கிறது

**1902 ஜூலை 6 அன்று தனது 12வது வயதில் காம வெறியனிடமிருந்து தன் கற்பைக் காப்பாற்ற முயற்சி செய்த மரிய கொறற்றி கொலை செய்யப்பட்டாள். மரிய கொறற்றியின் 100வது பிறந்ததினக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட திருத்தந்தை, மரிய கொறற்றி சதுக்கத்தில் அவளது சிலையைத் திறந்து வைத்து, "வாழ்க்கைப் பயணம் இவ்வுலகுக்கு அப்பால் தொடர்வதால் புனிதத்துவத்தைப் பேணவேண்டும்" என்றார்.**

''வாழ்க்கைப் பயணம் இவ்வுலகுக்கு அப்பால் தொடர்கிறது'' என திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் செப்ரெம்பர் 29 ஆம் திகதி இத்தாலியில் புனித மரிய கொறற்றி சதுக்கத்தில் அவளது சிலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மரிய கொறற்றியின் பிறப்பின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு அவள் வளர்ந்துவந்த லத்தீனாவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குகொண்ட திருத்தந்தை, சிறுமியின் விசுவாசத்தைப்பாராட்டி சமூகத்தைக் கட்டி எழுப்புகையில் புனிதத்துவத்தையும் ஐக்கியத்தையும் பேணவேண்டும் என்பதற்கு மரிய கொறற்றி சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறாள் என்றார்.

1902 ஜூலை 6 ஆம் திகதி அலெக்சாண்டர் என்ற காம வெறியன் 12 வயதான மரிய கொறற்றியின் கற்பைக் கெடுக்க முற்பட்ட வேளையில் சிறுமி தன் உயிரிலும் மேலாக தனது கற்பை மதித்ததால் அதற்காக உயிரையே தியாகம் செய்தாள்.

## ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் 'பாக்ஸ் கிறிஸ்டி'

சர்வதேச பாக்ஸ் கிறிஸ்டி இயக்கமானது அடுத்து ஹொங்கொங்கில் நடைபெறப்போகும் மகாநாட்டின் போது ஆசிய பசுபிக் பிராந்திய கிளையொன்றை நிறுவ ஆலோசித்து வருகிறது.

40 ஆண்டுகளுக்கு முன் லூர்துபதியில் ஆரம்பித்த இந்த இயக்கமானது உலகெங்கும் தனது பிரசன்னத்தைக் கட்டியெழுப்ப முயற்சி செய்துள்ளது. ஆனால் அது பெரிதும் அமெரிக்க ஐரோப்பிய இயக்கமாகவே இருந்து வருகிறது.

11 நாடுகளிலிருந்து 35 பேர் பங்குபற்றும் இம்மகாநாட்டில் பாக்ஸ் கிறிஸ்டியின் செயற்பாடுகளுக்கமைய தத்தம் நாடுகளின் சமூக, கலாசார, அரசியல் பொருளாதாரப்பின்னணிகளைப்பற்றி ஆராய்வர். அத்துடன் ஹொங்கொங் சீனா ஆகிய இடங்களில் திருச்சபையின் நிலைமையையும் ஆராய்வர்.

ஆசியாவில் இந்தியாவிலும் பிலிப்பைனிலும் மட்டுமே பாக்ஸ் கிறிஸ்டி நன்கு நிலைபெற்றுள்ளது. உலகில் சமாதானத்தை விருத்திசெய்வதே இவ்வியக்கத்தின் குறிக்கோளாகும். அதன் செயற்பாடுகள் மனித உரிமைகள், அகிம்சை ஆன்மீகம் ஆயுதப் பரிகரணம், உரையாடல் ஒப்புரவு தொடர்பானவையாகும்.

## யேசுசபையின் ஆய்வுநிலையத் திறப்புவிழா

யேசுசபை நிறுவப்பட்ட 450வது ஆண்டையும் புனித இஞ்ஞாசியார் பிறப்பின் 500வது ஆண்டையும் நினைவு கூரும்முகமாக ஆமதாபாத்தில் ஓர் ஆய்வு நிலையம் குஜராத் ஆளுநர் சுவரூப்சிங்கினால் திறந்துவைக்கப்பட்டது,

புனித சவேரியார் கல்லூரியில் இந்நிலையம் அமைந்துள்ளது. கல்லூரி அதிபர் பிதா ஹெட்விக் லுயிஸ் இந்நிலையம் ஏழைகளுக்குப் பயன்படுமெனக் கூறினார்.

இந்நிகழ்ச்சிக்கான நினைவு மலரை வெளியிடுகையில் ஆளுநர் நாட்டின் கல்வித்துறையில் கிறிஸ்தவர் ஆற்றிய தொண்டைப் பாராட்டினார்.

## திருவழிபாட்டு நாட்காட்டி

1992 ஆம் ஆண்டுக்கான திருவழிபாட்டு நாட்காட்டி டிசம்பர் மாதம் முதல்வாரத்தில் வெளிவருகிறது. காகிதத் தட்டுப்பாடு காரணமாக வரையறுக்கப்பட்ட அளவே அச்சிடப்படுவதால் முன் கூட்டியே உங்கள் பிரதிகளை பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒரு நாள்காட்டியின் விலை ரூபா 40/—

நிர்வாகம்

## பிலிப்பைனின் அடுத்த ஜனாதிபதி யார்?

பிலிப்பைனின் அடுத்த ஜனாதிபதியாக வரக்கூடியவர் யார் என்பது பற்றி வெரிற்றாஸ் உள்ளூர் வானொலி நடத்திய அபிப்பிராய வாக்கெடுப்பின்படி மிரியம் டிவென்ஸர் சந்தியாகோவும், ஜோசவ் எஸ்ட்ராடாவும் முதலிரு இடங்களை வகித்தனர். மூன்றாம் இடத்தை முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பிடல் ரமோஸும் நான்காவது இடத்தை முன்னாள் ஜனாதிபதியின் மனைவியான இமெல்டா மார்க்கோஸும் பெற்றுக் கொண்டனர்.

13654 வாக்குகளைப் பெற்ற திருமதி சந்தியாகோ முன்னாள் நீதிபதியாவார். அக்வினோ அரசாங்கத்தில் குடியேற்ற, வெளியேற்ற ஆணையாளராகவும் பதவி வகித்தார். அவரது சேவைக்காக 198· இல் ரமோன் மக்ஸைஸே விருது பெற்றவர்

அவருக்கு அடுத்தபடியாக 9142 வாக்குகளைப் பெற்ற எஸ்ட்ராடா ஓர் நடிகரும் அரசியல் வாதியுமாவார்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)


## குழந்தை யேசு திருத்தலத்தில் யாத்திரீகர் நிலையம்

பிலிப்பைனிலுள்ள செபு நகரிலுள்ள குழந்தையேசுவின் திருத்தலத்திற்குவரும் யாத்திரீகர் தொகை அதிகரித்துவருவதால் அங்கு யாத்திரீகள் நிலையம் ஒன்று அமைக்கப்படவிருக்கின்றது.

ஞாயிறு, வெள்ளிக்கிழமைகளில் அங்கு பெருந்தொகையான பக்தர்கள் வருவதால் இந் நிலையம் அவர்களுக்கும் பேருதவியாயிருக்கும் என ேராலயத்தின் நிர்வாகியான பிதா மெஜோராடா கூறியுள்ளார்.

இந்த யாத்திரீகள் நிலையத்தில் அமைக்கப்படவிருக்கும் திறந்த வெளி அரங்கு 19000 பேரைக் கொள்ளக்கூடியது. இங்கு நடைபெறும் விழாக்களைக்காண்பதற்கு வெளிநாட்டுப் பிரயாணிகளும் வருகின்றனர்.

இத்தலத்தின்வரலாறு 1521ல் ஆரம்பமாகின்றது. மகேலன் கொண்டுவந்த குழந்தை யேசுவின் சுரூபம ராஜா ஹுமயோனுக்குக் கொடுக்கப்பட்டதாகவும் அதற்கு அவ்வூரினர் ஒரு றுகோயிலைக் கட்டியதாகவும் கூறப்படுகிறது இவ்வாலயம் கடந்த 400 ஆண்டுகளில் 4முறை அழிவுற்றபோதும்யேசுவின் திருச்சுரூபம் எப்படியோ காப்பாற்றப்பட்டது. 1665 ல் ஒரு ஸ்பானிய வீரனால் அது கண்டெடுக்கப்பட்ட இடத்திலேயே தற்போதைய ஆலயம் அமைந்துள்ளது.



## வாழ்த்து வான் கடிதம்

நத்தார் வாழ்த்து வான் கடிதம் அச்சிட்டு கொடுக்கப்படுகிறது. தேவைப்படுவோர் எமது அச்சகத்தை அணுகவும்.

நிர்வாகம்.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம் கருத்து

### எமது காலத்துக்குரிய வேதசாட்சி

20ஆம் நூற்றாண்டின் முதல் வேதசாட்சி என திருத்தந்தை 2ஆம் அருள்சின்னப்பர் அழைக்கும் புனித மரிய கொறற்றி 1890 ஒக்ரோபர் 16இல் இத்தாலியின் கிழக்குப் பகுதியிலுள்ள மார்ச்சேஸ் இல் பிறந்தாள். 1990 ஒக்ரோபர் 16 முதல் கன்னியும் வேதசாட்சியுமான புனித மரிய கொறற்றியின் பிறப்பின் நூற்றாண்டு விழா அவர் வேதசாட்சியாக மரித்த லத்தினா மறைமாவட்டத்தில் கொண்டாடப்பட்டு பல நிகழ்ச்சிகள் மூலம் அது நினைவுகூரப்பட்டது.

செப்ரெம்பர் 29ஆம் திகதி திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் லத்தீனா மறைமாவட்டத்துக்கு விஜயம் செய்து புனித மரிய கொறற்றியின் பிறப்பின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

1902 ஜுலை 6ஆம் திகதி தனது பன்னிரண்டாவது வயதில் தன் கற்பைக் காப்பதற்காக உயிரையே தியாகம் செய்த மரிய கொறற்றியென்னும் சிறுமி திருத்தந்தை 12ஆம் பத்தினாதரால் 1950 ஜுன் 24 ஆம் திகதி புனிதையாக உயர்த்தப்பட்டாள்.

20ஆம் நூற்றாண்டின் ஆஞ்ஞேசம்மாள் என திருத்தந்தை 12ஆம் பத்திநாதரால் அழைக்கப்பட்ட புனித மரிய கொறற்றியை 'எமது காலத்துக்குரிய வேதசாட்சி'' என திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் வருணித்தார்.

புனித ஆஞ்ஞேசம்மாள், லூசியாள், ஆகத்தம்மாள், செசிலியம்மாள் போன்றோர் உரோமைச் சித்திரவதையின்போது வேதசாட்சிகளாக மரித்தனர். இறைவன் வேதசாட்சிகளுக்கென ஏற்பாடு செய்த இடத்துக்கு புனித மரிய கொறற்றியும் சென்றுள்ளாள் என குறிப்பிட்ட திருத்தந்தை நாங்கள் வாழும் இந்த நூற்றாண்டில் வாழ்ந்த மரிய கொறற்றி கடவுளுக்குகந்தவளாக இருக்கவேண்டும் என்ற ஒரே காரணத்தால் தன் கற்பை இழப்பதிலும், உயிரை இழப்பது மேல் என கருதினாள். இக்காலத்தில் வாழும் சிறுவர்களும், இளைஞர்களும் புனித மரிய கொறற்றியைப் பின்பற்றி தமது கற்பையும், புனிதத்தையும் பேணிப்பாதுகாக்கவேண்டும் என்றார்.

அத்துடன் புனித மரிய கொறற்றியைப் போல் பாவத்தையும், தீமையையும் எதிர்த்துப் போராட வேண்டும் என்றும், செபம், பரித்தியாகம், கட்டளைகளை நுணுக்கமாக அனுசரித்தல் என்பவற்றால் இதனை வெற்றி கொள்ள முடியும் என்றும் கூறினார்.

''புனிதத்தையும், கற்பையும் எப்போதும் உயர்வாக மதிக்க வேண்டும்'' என அழைப்புவிடுத்த திருத்தந்தை ''தற்கால கலாச்சாரத்துக்கு எதிரான தீர்மானத்தை எடுக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது அதற்காகத் தயங்கவேண்டாம் என்றும், நீங்கள் கற்புநிறைந்த ஏழைக்கிறிஸ்துவுக்கு உரியவர்களாதலால் அதற்கு எதிராக உலகம் செல்லுகையில் அதனைப் பின்பற்றவேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.''

''வேதசாட்சிகளின் இரத்தம் விசுவாசிகளின் வித்து'' என்ற மேற்கோளையும் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, புனித மரிய கொறற்றி தனது வேதசாட்சியத்தால் இக்காலத்தில் வாழும் சிறார்களுக்கும் இளைஞர்களுக்கும் வழிகாட்டியாக இருக்கின்றாள் என்றும், அவளது வீரத்தையும், துணிவையும் பின்பற்றி எமது வாழ்விலும் கற்பை இழப்பதிலும், உயிரை இழக்கும் அளவுக்கு அதற்கு எதிராக போராட வேண்டும் என்றும் அறிவுறுத்துகின்றார்.

எமது வாழ்விலும் என்றும் கற்பு உள்ளவர்களாக வாழ்வோம். கற்பை இழப்பதிலும் உயிரை இழப்பது மேல் என்ற உணர்வோடு அதனைப் பேணிப்பாது காப்போம்.

# இருபதாம் நூற்றாண்டின் முதல் வேதசாட்சி

கோம்போ மார்டோ பெரைரீ என்ற ஊர்களின் வழியாக ரோமாபுரியிலிருந்து நெட்டுனோ நகருக்கு நீங்கள் பிரயாணம் செய்ய நேர்ந்தால், போகும் பாதைகளிலெல்லாம், திரும்பும் திக்கெல்லாம் ஒரு சிறுமியைப் பற்றிய பேச்சே உங்கள் செவியில் பாயும். அவள் யார்? தன் கற்பைக் காப்பாற்ற– தன் மதிப்பிடற்கரிய மானத்தைப் பாதுகாப்பதற்காக, மரணத்தை முத்தமிட்ட ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுமி, அவளைப் பற்றிய பேச்சுத் தான் நீங்கள் கேட்பீர்கள். அவள் தான் மரியா. அக்கிராம மக்களின் உள்ளத்தில் அழியாத இடம் பெற்று விட்ட திருமகள்.

மரியாவோடு புது நன்மை வாங்கிய ஒருத்தி இப்போது கிழவி, அதை இன்றும் பெருமையாகக் கூறுகிறாள். மரியாவை அடிக்கடி சந்தையில் சந்தித்தவள் இன்னும் இருக்கிறாள். ஒரு விவசாயி மரியா சாவதற்குச் சில தினங்களுக்கு முன்பாக தன்னிடம் அலக்சாந்தர் வாங்கிச் சென்றிருந்த அரிவாளைத் திருப்பிக் கொடுக்க வந்ததாகக் கூறுகின்றான். மரியா தாக்கப்பட்ட அன்று காலை தன்னுடைய தாயாரின் தையற் கடைக்கு மரியா வந்து தான் தைக்கக் கொடுத்திருந்த புதுச்சட்டையைப் போட்டுப் பார்த்ததாகவும் ஒரு பெண் கூறுகிறாள். அரை நூற்றாண்டு மறைந்தும் மரியா, அந்த மலை நாட்டு மக்களின் இருதயங்களிலே, வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறாள்.

தெரேசாவின் சகோதரன் தோமினிக் கூறுகிறான். ''நான் மரியாவின் காலத்தில் வாழ்ந்தவன். மரியாவை சிறு பிராயத்திலிருந்தே எனக்குத் தெரியும். மரியா இறந்த பிறகும் நாங்கள் பெரைரீயை விட்டுப் போகவில்லை. ஆஹா! மரியாவின் மாசற்ற உடலைக் கல்லறைக்கு எடுத்துச் சென்ற அச்சமயம் நெட்டுனோவின் அத்தனை மக்களும் பின் தொடர்ந்து வந்தனர். அந்தக் காட்சி இன்னும் என் கண்களை விட்டு அகலவில்லை. இப்பொழுது நடப்பது போலவே தோன்றுகிறது. அசுந்தா மரியாவின் அன்னை சோகமே உருவெடுத்தாள் போல் நின்றாள். தன் மகளை அடக்கிய பின் பெரைரீக்கே திரும்பி வந்தாள் எனினும் அவள் அதிக நாள் அங்கு தங்கவில்லை. தன் மகள் ஓடியாடி, வளர்ந்த இடத்தில் இருபபது அவளுக்கு அந்த நினைவை-மரியாவின் நினைவை எப்பொழுதும் நினைவுறுத்திக் கொண்டிருந்தது, ஆகவே அவள் தன் குழந்தைகளோடு கொரினால்டோவுக்கு – அவள் புறந்த ஊருக்குத் திரும்பி விட்டாள்.''

வயோதிப தொமினிக்கோ மேலும் கூறுகிறான், ''அலக்சாந்தரின் தந்தை ஜியோவானி எங்கு போனானென்று தெரியவில்லை. ஆனால் அலக்சாந்தர்? மரியாவைக் கொன்ற குற்றத்திற்காக முதன் முதல் நெட்டுனோவிலுள்ள சிறையில் அடைக்கப்பட்டான்.

அவன் மைனராக இருந்தபடியால் அவனுக்கு முப்பதாண்டு கடுங்காவல் விதிக்கப்பட்டு சிசிலித் தீவிலுள்ள நோட்டோ சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டான்.''

''மரியாவின் வேதசாட்சி மரணம் நாடு முழுவதும் பரவி அநேக திரு யாத்திரைக்காரர்கள் அவளுடைய கல்லறையைத் தரிசித்து வருகின்றனர். பல புதுமைகளும் நடக்கின்றன.''

''ரோமாபுரியில் வசித்து வந்த ஒருவன் இராஜபிளவை நோயால் பல ஆண்டுகள் கஷ்டப்பட்டு வந்தான். மருத்துவ வல்லுநர்களால் கைவிடப்பட்ட அவன் மரியாவை நோக்கி மன்றாடியதின் பேரில் அற்புதமாகக் குணமடைந்தான்.''

''மிசெற்றி என்ற ஒரு சீமாட்டி பல ஆண்டுகள் குரல்வளையில் ஏற்பட்ட கட்டியால் துன்பப்பட்டாள். அறுவை சிகிச்சை செய்தாலொழிய கட்டி குணப்படாது என்று டாக்டர்கள் கூறினார்கள். அவள் மரியாவை நோக்கி வேண்டிக் கொள்ளவே ஆச்சரியப்படத்தக்க விதமாக குணமடைந்தாள்.''

''இன்னும் சிசிலித்தீவிலிருந்த ஒரு குருவானவர் மரியாவை நோக்கி வேண்டிக் கொண்டதால் அவருக்கு பல ஆண்டுகளாக ஏற்பட்டிருந்த தீராத நோய் தீர்நதது.''

மரியாவுக்கு புனிதை பட்டமளிக்க எவ்வளவோ விசாரணைகள் நடந்தன. விசாரணைகள், அபிப்பிராயங்கள், பரிசோதனைகள், விவாதங்கள் பல நடைபெற்றன.

பொலிஸ் அதிகாரிகள், மருத்துவப் பணிப்பெண்கள், மருத்துவர்கள், தொமினிக்கோ இன்னும் பலப்பலர் வாக்கு மூலமளித்தனர். அசுந்தா, தன் மகள் சார்பில் முக்கியமான சாட்சி. சாட்சிகள் எல்லோரும் மரியாளுக்குசாதகமாகவேவாக்களித்தனர்.' மரியா, மாசற்றவள். விரத்தோடு போராடினாள். பாவத்தைவெறுத்தாள்' என்றெல்லாம் நிரூபிக்கப்படும் முக்கியமான சாட்சி ஒன்று இன்னும் வேண்டியிருந்தது. இவ்விஷயத்தில் எழும் சகல கேள்விகளுக் நம் தகுந்த பதில் கொடுக்கக்கூடிய ஒரு சாட்சி இன்னும் தேவைப்பட்டது. அந்தச் சாட்சி யார்? ... அது தான் மரியாவைக் கொன்றவன் அலக்சாந்தர். மரியா இறந்து முப்பத்தைந்து ஆண்டுகள் ஓடிவிட்டன. அலக்சாந்தர் தன் சிறைத்தண்டனையை முடித்துவிட்டு வெளியேறினான்.

இப்போது குற்றத்தை உணர்ந்து வருந்தி, தான் குற்றவாளி என்று ஒப்புக்கொண்டான். ''மரியா ஒரு மாசற்ற லீலி–தூய வெண்மையான அந்த லீலியை எனது மிருக வெறி இரத்தமயமாக்கி விட்டது. அவள் சிவப்பு லீலி-அவள் தன் இதழ்களெல்லாம் இரத்தம் தோய்ந்த பொழுதிலும் வீரமாகப் போராடினாள்'' என்றுகூறினான்.

1950ஆம் ஆண்டு ஜுன் 24ஆம் நாள், வத்திக்கானின் புனித இராயப்பர் தேவாலயத்தின் முகப்பில் மரியாவை திருச்சபையின் புனிதைகள் வரிசையில் சேர்த்தவிழாவில் அசுந்தா மகிமையுள்ள இடத்தைப் பெற்றாள். பன்னிரண்டாம் பத்திநாதர் மரியாவைப் புனிதையாகப் பிரகடனப் படுத்தியவுடன் மரியாவின் திருவுருவப் படத்தை மூடியிருந்த பட்டுத்திரைச்சீலை விலகியது, அசுந்தாவின் கண்கள் வாஞ்சையோடும், வணக்கத் தோடும் அதில் மொய்த்தன. கண்ணீர் அவள் கண்களிலிருந்து உருண்டு சிதறியது. ஆனந்தக் கண்ணீர்!

நெட்டுனோவில் வரப்பிரசாத மாதாவின் கோவிலில் மரியகொறற்றியின் சடலம் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகிறது.

நன்றி:– செந்துகில்.

## நூற்றாண்டு நினைவாக குருத்துவ பயிற்சி

''மூலதனம், தொழில்'' பற்றிய சுற்றுமட நூறாண்டு ஞாபகார்த்தமாக நடைபெற்ற உருவாக்கப் பயிற்சிநெறியொன்றில் தாய்வானைச் சேர்ந்த 257 மறைமாவட்டக் குருக்களில் 50 பேர் பங்குபற்றினர்.

ஏழைகளுக்கான திருச்சபை, தனிநபர், சமூக மனச்சாட்சியை உருவாக்குதல், திருச்சபையின் சமுதாயப்பண்புகள், நற்செய்திப்பணி போன்ற பல விடயங்கள் பற்றி அவர்கள் கலந்துரையாடினர்.

அவர்கள் அண்மையிலுள்ள சலவைக்கல் தொழிற்சாலையொன்றை தரிசித்ததுடன் நிரந்தர வதிவிடமற்ற தொழிலாளருடனும், மீனவருடனும் உரையாடினர்.

நிகழ்ச்சிகளின்போது தாய்ப்பேறேறும் நோவாறும் தொழில் நிலைய இயக்குநரான பிதா எலகூறியா தொழில் நிலைமைகள், தொழிற்சங்கங்கள், நிலையத்தின் செயற்பாடுகள் ஆகியன குறித்து உரையாற்றினார்.

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள்பங்கில் நடைமுறைப்படுத்துங்கள்

# நினைவாலயம்

''அனிதா! சீக்கிரம் வந்து விடு. கோவிலுக்குச் சென்று புனித அன்னம்மாளிடம் வேண்டிக் கொண்டு வா'' என்ற அம்மா மகளின் நெற்றியில் சிலுவை அடையாளம் இட்டு விட்டாள். மகளின் அழகுக்குத் திருஷ்டி பட்டு விடுமாம். மாலையில் கால் நடையாகவே தங்கள் கிராமத்தில் உள்ள அன்னம்மாள் கோவிலுக்கு சென்றாள். கோவிலில் பாபுவின் பார்வை தன்னைத் தழுவுவதைப்போல இருப்பதை அவள் உணர்ந்தாள். காலையில் 'ஸ்வீட் பார்சலை, அவனிடம் நீட்டும்போதே அவன் அந்தப் பார்வையால் அவளைத் தழுவி விட்டான். அவள் புனித அன்னம்மாள் ஆலயத்தில் நுழையும் பொழுது வழிபாடு நடந்து கொண்டு இருந்தது. அவள் தனது வேண்டுதல்களை முடித்துக் கொண்டு வெளியே வந்தாள். இன்னும் இருள் பரவவில்லை. மனம் அலைபாய்ந்து கொண்டு இருந்தது. மாலையில் அலுவலகத்தில் இருந்து வந்ததும் அம்மா கடிதம் ஒன்றை நீட்டினாள். கொழும்பில் இருக்கும் அத்தை மகன் பிரஸன்னா தான் எழுதி இருந்தான். அவனைப் பார்த்து குறைந்தது 8 வருடங்களாவது இருக்குமா? கலகலவெனப்பேசிக் கலாட்டா செய்வான். அத்தை கொழும்பில் இருந்து வந்த பொழுது தன்னுடன் அழைத்து வந்திருந்தாள் அப்பொழுதே அவர்களை இணைத்துப் பேசிச் சிரித்தார்கள். அதற்குப் பலமாக அவள் அப்பா இருந்தார். தற்போது அவர் இல்லை. அதனால் அந்த உறவுக்குப் பலம் இல்லாமல் போய் விடுமோ என்ற பயம் அம்மாவின் நெஞ்சில் கனன்றதுண்டு. அத்தை அவளது அழகையும், புத்திசாலித்தனத்தையும் மனதில் எடைபோட்டது அவர்களுக்குத் தெரியாது.

அவனது வருகையால் ஏதாவது உறவு ஏற்பட வழி இருக்குமோ? இருக்கும் என்றுதான் அம்மா நினைத்தாள். வாய்விட்டுப் புலம்பினாள். இதனால் அனிதாவின் குழப்பம் தான் அதிகரித்தது. பிரஸன்னா மன்னாருக்கு ஏதோ அலுவலாக வரப்போகின்றான் வந்தவன் வெறும் உறவு ஞாபகம் வரவோ, இல்லை உறவு தொடரவோ வங்காலைக்கு வந்து 4 நாட்கள் தங்கப் போகின்றான். ஆனால் 4 தினங்களுக்கு முன் அலுவலகத்தில் 'அவசரம்' என்று குறிக்கப்பட்ட பைல் ஒன்று அவள் பார்வைக்கு வந்தது. பணியாள் தான் எப்போதும் கொண்டு வருவான். ஆனால் அன்று மேலதிகாரி பாபு அவள் மேசை மீது வைத்து விட்டுப் போனான். ''அனிதா, சீக்கிரம் இன்னும் அரைமணியில் பார்த்து முடித்து, நீயே என்னிடம் கொண்டு வந்து கொடு. கைவேலையை முடித்துவிட்டு பைலைப் புரட்டினாள். அதில் 2 தாளைப் புரட்டியதுமே ஒரு கவர் பார்வையில் நிரடியது. கவரின் மேல் அனிதா என்ற அவள் பெயர் கையால் எழுதப்பட்டு இருந்தது. பைலில் ஏது கவர்? அவசர அவசரமாகப் பிரித்தாள். நெஞ்சு ''திக்திக்'' கென்று அடித்துக் கொண்டது. பாபுதான் சுருக்கமாக எழுதி இருந்தான்.

## சிறுகதை

அன்புள்ள அனிதா! ரொம்ப ரொம்ப யோசித்த பின்தான் இக்கடிதத்தை உனக்குத் துணிவாக எழுதுகின்றேன். பல முறை என் உள்ளத்தை உன்னிடம் சொல்ல முயன்றேன். சொல்வதைவிட எழுதுவது சுலபம் என்பதால் எழுதியே விட்டேன். உன் மனம் எப்படியோ? அனித் இன்னும் நீ புரிந்து கொள்ளவில்லையா? நீ சம்மதித்த பின்னரே என் பெற்றோரிடம் சொல்லி ஏற்பாடு செய்வேன். என் அன்பே! விரைவில் பதிலைச் சொல்வாயா? என் அன்பு இதயம் உன்னிடம்.

உன் அன்பன், பாபு.

பாபு உங்களுக்கா என்னிடம் இப்படி ஓர் இது? மீண்டும் பைலைப் புரட்டினாள். அதில் அவள் பார்க்கவோ, செய்யவோ எதுவும் இல்லை. இக்கடிதத்தைத் தருவதற்கு கையாண்டிருக்கும் தந்திரம் இது. என்ன பதிலை எழுதுவது? அந்தக் கடிதத்தைக் கைப்பையில் வைத்துக் கொண்டாள். பதில் எழுதுவதுதானே மரியாதை. அதனால் சிறு கடிதம் ஒன்றை எழுதிக் கவரில் வைத்து மூடினாள்.

டியர் பாபு! இதைப்படித்தேன். நான் சிறிதும் இக்கடிதத்தை எதிர்பார்க்கவில்லை. ஆனால் சில மாதங்களாகவே தங்கள் போக்கில் ஏற்பட்ட மாறுதல்களைக் கவனித்தேன். ஒரு 15 தினங்களை யோசித்துப் பதில் சொல்லப் போதுமான நேரமாக எடுத்துக்கொள்கின்றேன், மன்னிக்கவும். தங்கள் அன்புள்ள அனிதா.

பைலை அவன் அறைக்குப் போய் மேசை மீது வைத்த போது அவன் அவள் முகத்தையே பார்த்தான். வறண்ட நிலத்துக்கு மழை வராதா எனப் பார்க்கும் பார்வை. அனிதா என்ன சொல்லப் போகின்றாய்? என்று கண்கள் கேட்டன. ''ம்.. பார்த்தேன்'' என்றவள் விடுவிடென்று தன் அறைக்கு வந்து விட்டாள். நீண்ட நேரம் நெஞ்சின் துடிப்பு ஓயவில்லை. ஆனால் இன்று காலையில் அவன் ஸ்வீட் கொடுத்துப் பேசிய போது அவளைப் போகவிடவில்லை. அவளால் தான் அவன் முகத்தைப் பார்க்க முடியவில்லை. மேசை மீது கண்கள் ஊர்ந்தன. ''அனிதா என் நினைவுகள், ஆசைகள் எல்லாம் தவறாக இருந்தால் நீ தாராளமாகச் சுட்டிக்காட்டலாம். சில மாதங்களாக என் மனதில் உழன்று மறைத்து வைத்துக் கொண்டிருந்த எண்ணங்களைத்தான் உன்னிடம் சொன்னேன். உன் மீது நான் கொண்ட அன்பு சத்தியமானது. நீ உனக்குத் தேவையான நேரத்தை எடுத்துக்கொள். நீ போகலாம்.

இதைக் கேட்கும்போது பிரஸன்னாவின் கடிதம் வந்திருக்கும் என்று தெரியாதே! அதனால் மனதில் குழப்பம் இல்லை. தன்னில் ஒருவன் காதல் கொண்டுள்ளான் என்ற பேரின்பம் மட்டும் இருந்தது. முடிவெடுக்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள். திருமணம் என்பது ஆயிரங்காலத்துப்பயிர். பின்பு அதை மாற்ற முடியாது. அதனால்தான் கேட்கின்றேன். அவள் சொல்லி விட்டுவந்துவிட்டாள். ஆனால் வீட்டுக்கு வந்ததும் பிரஸன்னாவின் வருகையைத் தாங்கிய கடிதம். பிரஸன்னா கடிதத்தை மன்னாரில் இருந்தே எழுதி இருந்தான். அதனால் அவன் இன்றோ, நாளையோ வந்து விடுவான். வாசலில் நுழைந்ததும் நடையில் கனத்த பூட்ஸீகள் கிடந்தன. 'ஓ, பிரஸன்னா வந்து விட்டானா,? அவளைக் கண்டதும் அவனது கலகலப்பு கட்டவிழ்த்துக் கொண்டது. ''மாமி! அனிதா வந்துவிட்டாள். என்ன அனிதா கோவிலையே பெயர்த்துக் கொண்டு வந்துவிட்டாயா? எவ்வளவு நேரமாகக் காவல் இருக்கின்றேன், ''ஓ... ஸாரி அத்தான்?'' அம்மா ஸ்வீட் நிறைந்த தட்டைக் கொடுத்து வைக்கச் சொன்னாள். ''நான் வரப்போவது தெரியுமா? இனிப்பெல்லாம் அமர்க்களப்படுகுதே? இன்று என் பிறந்தநாள் என்றாள் நாணத்துடன். ''ஓஹோஹோ! இதை முன்பே மாமி சொல்லி இருக்க வேண்டாமா? மாமி இங்கே சமைக்க வேண்டாம். அனிதாவின் பிறந்த நாளை ஹோட்டலில் கொண்டாடப் போகின்றேன். அனிதாவும், நானும் ஹோட்டலுக்குப் போகப் போகின்றோம்'' அவன் பேசும்போது அவனையே கவனித்தாள் அனிதா. பாபுவைவிட அழகு தான். ஆனால் பாபுவின் அமைதி இவனிடம் இல்லை. ஆரவாரமும், வேகமுமே பிரஸன்னாவிடம் இருந்தன. அனிதா சமையல் அறைக்குள் வந்தாள். ''அம்மா! எப்படியம்மா அத்தானுடன் தனியாகப்போவது'' என முணுமுணுத்தாள். ''போனால் என்னடி? உன் உறவுக்காரன் தானே! அத்தை ஒரு வேளை உனது நடத்தையைப் பார்த்து வரும்படி சொல்லியிருப்பாள். நீ சகஜமா, புத்திசாலியா நடந்து கொள். உன் கவலைதானே என்னை உருக்குகின்றது'' என்று தழுதழுத்தாள்.

இருவரும் பிறந்த நாளைக் கொண்டாட ஒரு பிரபல ஹோட்டலுக்குச் சென்றனர். அவளைத் திணறடிக்கும் வகையில் உணவுகள். வாயில் வாசம் கமகமக்க இருவரும் வெளியே வந்தனர். அனித்! உன் பிறந்த நாளைக்கு ஏதாவது பரிசு கொடுக்க வேண்டுமே என்று கூறிச் சிந்தித்தவன் அருகில் இருந்த கலைப் பொருள் காட்சிச் சாலைக்குள் நுழைந்தான் அனிதாவும் மௌனமாக அவனுடன் சென்றாள். பல பொருட்களைப் பார்வை இட்டு ஈற்றில் நாக பாம்பின் தோலால் ஆன கைப்பை ஒன்றை வாங்கினான். கவுண்டரில் அவன் பணத்தைக் கொடுக்கப் பர்ஸைத் திறந்தான். பின் புறப் பொக்கற்றில் இருந்து பர்ஸை ஸ்டைலாக உருவி நோட்டுக்களை உருவினான். அவள் மௌனமாக அவனைக் கவனித்த போது பார்வையில் பர்ஸின் ஓரத்தில் செருகி இருந்த பெண்ணின் புகைப்படம் மின்னலாக விழுந்து மறைந்தது. ஆயினும் அது யார் என சரியாகத் தென்படவில்லை. வெளியே வந்து வீட்டுக்குப் போகும்போது அவள் அவனுடன் எதுவுமே பேசவில்லை.

மறுநாள் அவன் கொழும்பு கிளம்பினான். அவளால் அவனுடன் கொழும்பு செல்ல மனம் இல்லை. மனத்தில் எழுந்த கவலை சொல்லில் பொய்யைச் சொல்லவைத்தது. ''எனக்கு அலுவலகத்தில் ரொம்பவேலை லீவுபோட முடியாது''. அவள் தன்னுடன் வரவில்லை என்பதை அறிந்து பிரஸன்னா குளிக்கப் போனான். அம்மா சமயல் அறையில் வேலையாக இருந்தாள். இதனால் அவள் அவனது ரௌசரில் இருந்து பர்ஸை உருவிப் பார்த்தாள். இரட்டைப் பின்னலுடன் கண்கள் மயக்கத் தேவதைபோன்ற ஒரு பெண்ணின் நெஞ்சுவரை எடுக்கப்பட்ட போட்டோ. சிறிது நேரத்துக்குமேல் அவளால் பார்க்கமுடியவில்லை, அவள் மனதில் ஒரே சலனம். இவன் யாரையோ காதலிக்கின்றான். நான் ஏன் அவன் பின் அலையவேண்டும்? நான் ஏன் கவலைப்படவேண்டும்? இவன் வாழ்வில் ஒருத்தி குறுக்கிட்டபின் அவனுக்கு ஏன் என் மீது பாசம் என்று சிந்தித்தாள் பல நாட்களாக. 4வது நாள் அவன் கிளம்பிவிட்டான். பிரஸன்னா போனதில் இருந்து அவள் அம்மா தினமும் கடிதத்தை எதிர்பார்த்தாள். ஆனால் அவன் பஸ் ஏறியவுடன் இலேசாக ஆரம்பித்த காய்ச்சல் கொழும்பு சென்றதும் அவனைப் படுக்கவைத்து விட்டது. ஆதலால் அவனால் கடிதம் போடமுடியவில்லை. அத்தானின் வருகை சாதாரணமானதுதான். நீங்கள் நிறைய கனவு காணாமல் இருங்கள் என்றாள் அனிதா அம்மாவிடம்.

ஒரு ஞாயிறு தினம் காலை பூசையை முடித்து வந்த அனிதா தனக்குப்பின் ஒரு பியட் கார் வந்து நிற்பதைக் கவனிக்கவில்லை. ஆனால் அவள் அம்மா அதைக் கண்டு விட்டு யாராவது விலாசம் தெரியாமல் இங்கு வந்துவிட்டார்கள் என எண்ணினாள். ஆயினும் காரின் அருகில் சென்று யார் வேண்டும் என வினவினாள். பாபு உடனே அனிதா என்ற பெண் என்றான். வாசலில் கேட்ட சலசலப்பினால் அங்கு வந்த அனிதா அவனையும் அவனது தாய் தந்தையரையும் உள்ளே அழைத்து வந்தாள். அம்மாவுக்கு அவனை அறிமுகம் செய்ய, இது என் அம்மா, அப்பா என பாபு அவர்களையும் அறிமுகம் செய்துவைத்தான். அம்மா உள்ளே சென்றதும் அவளைத் தொடர்ந்து அனிதா உள்ளே சென்றாள். உடனே அம்மா அவளிடம் ''பிரசன்னாவிடம் இருந்து கடிதம் வருமுன் இது என்ன வேலை'' என்று வெடித்தாள்.

அ. ஜெயா மேரி சொய்சா
''அசந்தா கவுஸ்''
6ஆம் வட்டாரம்
வங்காலை, மன்னார்.

''நாம் எதிர்பார்ப்பது என்ன தான் நடக்கும்? இவர் என் மேலதிகாரி. பிரசன்னாவை விட இவரை நான் விரும்புகின்றேன்'' என்றாள் அனிதா. உடனடியாக பல ஆரவாரங்களுடன் உபசரிப்புக்கள் நடைபெற்றது ஒரு மாதத்தின் பின் திருமணம். அன்று காலையே பிரஸன்னா திருமணத்துக்கு வந்துவிட்டான். ''நான் தான் பிரசன்னா'' என்று பாபுவிடம் அறிமுகப் படுத்திக் கொண்டான். பெண் வீட்டுக்காரன் என்றவகையில் சகல வேலைகளையும் பிரஸன்னா செய்தான். சடங்குகள் முடிந்தபின் ஓய்வாக அமர்ந்திருந்தாள் அனிதா. கையில் சிறு பார்சலுடன் உள் நுழைந்தான் பிரஸன்னா. அனிதா அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் கையில் உள்ள பார்சலைப் பிரித்து 'தாஜ்மகால்' உருவம் ஒன்றைக் கண்ணாடிக் கூட்டுடன் எடுத்து வைத்தான்.

''தாஜ்மகால்'' அனிதாவுக்குக் கோபம் பொங்கி வர ''இது என்ன'', என்று வெடித்தாள். ''இது என் பரிசு'' என்றான் பிரஸன்னா.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

பாதுகாவலன்
PATHUKAVALAN

## கிறிஸ்துவின் பிறப்புவிழாவிற்கு ஆயத்த வழிபாடு

கிறிஸ்துவின் பிறப்பு விழாவிற்கு ஆயத்தம் செய்யும் காலம் திருவருகை காலம்.

ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்துவின் பிறப்பு விழாவை வெகு விமரிசையாக கொண்டாடினோம். இது ஒவ்வோர் ஆண்டும் வந்துபோகின்ற ஓர் நிகழ்ச்சியாக அமைந்து விடுகிறது. விழாவின் உட்பொருளை நாம் அறிந்து கொள்ளாமல், ஆடம்பரங்களோடு கூடிய விழாவாக கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடி முடித்துவிட்டோம்.

மீண்டும் ஒரு சந்தர்ப்பம் எம்மை நாடி வந்துள்ளது. இவ்வருடம் கிறிஸ்து பிறப்புவிழா எமக்கு எப்படி அமையப்போகிறது? பயனுள்ள விதத்திலா? அன்றேல் பழக்கப்பட்ட பழைய சடங்கு முறையிலா?

இன்று எமது நாட்டில் நாம் பல விதமான துன்பதுயரங்கள் மத்தியில் எமக்குமீட்பு இல்லையா என்று ஏங்கும் ஒரு நிலையில் கிறிஸ்துவின் பிறப்புவிழாவை எதிர் கொள்ள உள்ளோம். எமக்கு மீட்பை பெற்றுத்தருபவர் யார்? அது எப்போ என்று கேட்டவர்களாக துன்ப வாழ்வின் விளிம்பிற்கே சென்றுவிட்ட ஒரு சூழலில் வருகிறது கிறிஸ்துவின் பிறப்புவிழா.

வாழ்வளிக்கும் இறைவன் மீட்பளிக்கும் ஆண்டவர் என்றும் எம்மோடு பிரசன்னமாக இருக்கிறார். அவரது இரக்கத்தை பாதுகாப்பை, வழிநடத்தலை நாம் கண்டுகொள்ளாத போதும், அவர் எம்மோடு இருக்கிறார், எமக்கு துணைபுரிகின்றார். அந்த இறைவனை, நாம் கண்டு அவரில் வாழவேண்டும்.

எனவே ஒளியாக,வழியாக,வாழ்வாக இவ்வுலகிற்கு வந்த இறைவன் போர் பசி,பீதி பயம், கலக்கம் என்னும் இருள் மேகங்கள் எம்மை சூழ்ந்துள்ள இந்நிலையிலிருந்து விடுவித்து ஒளிமயமான ஒரு எதிர் காலத்தை பெற்றுத்தர அருள்வேண்ட இக் காலத்தை தகுந்த முறையில் பயன்படுத்துவோம் — ஆயத்தம் செய்வோம்.

திறந்த உள்ளத்தோடு கிறிஸ்துவை எதிர் கொள்ள அமைதியான மனத்தோடு கிறிஸ்துவை எதிர் கொள்ள துன்பங்கள் ஊடாக வாழ்வுகிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு கிறிஸ்துவை சந்திக்க நீ தயாரா?

ஆயத்தமாகு: காலம் — உன்னை அழைக்கிறது.

தொடக்க வழிபாடு (4 வாரங்களுக்கு)

என்றும் எம்மோடு இருக்கும் இறைவனின் பிரசன்னத்தை உணர்வோம்.

பஜனை:- வாழிய மூவொரு இறைவா.

அல்லது

(வேறு பொருத்தமான பஜனை பாடலாம்.)

சங்கீதம்:- 94ம் சங்கீதத்தை செபிப்போம்.

மன்னிப்பு:- இறைவனின் பிரசன்னத்தை நாம் உணராது, பல கவலைகளுக்குள்ளாகி துன்பப்படும் வேளையில் இறைவனை மறந்து போன நிலையை எண்ணி கிறிஸ்தவ வாழ்வில் கொண்டாடும் அருட்சாதன கொண்டாட்டவழிபாடுகளை சம்பிரதாயமாக நடாத்தி அதனூடாக அருளை பெற தவறிய குற்றங்களுக்காக — மன்னிப்பு வேண்டுவோம்.

பஜனை:- நான் பாவி யேசுவே. அல்லது
தேவனின் திருமகனே தேடும் ஆயனே.

### முதல் வாரம் (1 12 1991)

முதல்வாசகம் — எரேமியா 33 14-16.
பதிலுரைபாடல்:— சங். 24
2 ஆம் வாசகம் — தெசலோ, 3: 12-4:2
நற்செய்தி:— லூக் 21: 25 28, 34-36.

சிந்தனை — மனிதன் எப்பொழுதும் எதையோ எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறான் கல்வி கற்கும் மாணவன் பரீட்சையில் சித்தியை எதிர் பார்க்கிறான் உழவன் அறுவடையில் நல்ல விளைச்சலை எதிர் பார்க்கிறான் தற்காலத்தில் நாம் அனைவரும் அமைதியான நிறைவாழ்வை எதிர்பார்க்கிறோம். மனித வாழ்வு ஓடிக்கொண்டு இருக்கிறது எதிர்பார்ப்புக்களும் காலத்துக்குக் காலம் ஆளுக்கு ஆள் மாறுபட்டதாக இருக்கிறது மனிதவாழ்வு எதிர்பார்ப்போடே செல்கின்றது. ஆனால் கிறிஸ்தவர்களாகிய எமக்கு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எம் எதிர்பார்ப்பின் நிறைவாக அமையும் என்பது நம்பிக்கை.

அன்று இஸ்ராயேல் மக்களின் எதிர்பார்ப்பு யூதாவினால் வரும் மீட்பாகும், அம்மீட்பைக் கொடுக்கவல்ல ஒருவர் தாவீதின் குடியில் பிறப்பார் என்ற வாக்குறுதி நம்பிக்கையூட்டும் வாக்காக அன்று இருந்தது. மீட்பராகிய கிறிஸ்து வல்லமையோடும் மாட்சிமையோடும் வருவார்.

அவரது வருகை அவரை ஆவலோடு எதிர்பார்த்தவர்களுக்கு மகிழ்ச்சியானது. எனவேதான், உலக கவலைகளில் மூழ்கி வெறும் சடங்குகளில் வாழாது நற்செய்தி படிப்பினை வழி நின்று அன்புறவில் வாழ்ந்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை மகிழ்ச்சியுடன் எதிர்பார்க்க இவ்வாசகங்கள் எம்மை அழைக்கின்றன.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# குருவின் கோலை குறித்து அதிர்ச்சி

நாகபூரில் கிறிஸ்து அனுசார சபையின் தலைவர் பிதா மூல வீற்றில் கொலையுண்ட நிகழ்ச்சி கேரளத் திருச்சபையை துக்கத்திலாழ்த்தியது.

செப்டெம்பர் 7ஆம் திகதி பிதா மூல வீற்றிலும் பிதா மத்தியூ துருத்திலும் விமான நிலையத்துக்கு சென்றுகொண்டிருக்கையில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் அவர்களை நோக்கிச்சுட்டனர். பின்பு அதிபரின் கைப்பையை எடுத்துக்கொண்டு ஓடித்தப்பி விட்டனர்.

55 வயதான பிதா மூலவீற்றில் சீரோ மலங்கரா ரீதித் திருச்சபையைச் சேர்ந்த கிறிஸ்து அனுசார சபையின் தலைவராக கடந்த ஆறாண்டுகளாக இருந்து வந்துள்ளார்.

திருவல்லாற்றிலுள்ள பெத்தனி ஆச்சிரமத்தில் நடந்த அவரது மரணச் சடங்கில் சுமார் 10,000 மக்கள் கலந்து கொண்டனர் திருவனந்தபுரம் பேராயர் பெனடிக்ற் மார்கிறகோரியோஸ் பிரேதத்தைக் கையேற்றார்.

கேரள அரசு இக்கொலையை வன்மையாகக் கண்டித்து, குற்றவாளிகளைக் கைது செய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறு மகாராஷ்டிர அரசைக் கேட்டுள்ளது.

## காந்தியின் அகிம்சை இன்றும் பொருத்தமானதே

மகாத்மா காந்தியின் பேரனான ராஜ்மோகன் காந்தி ''ஏசியா வோக்கஸ்'' செய்திக்கு அளித்த குறிப்பு ஒன்றில் காந்தியின் அகிம்சை இன்றைய அரசியலிலும் பொருத்தமானதே எனக்குறிப்பிட்டுள்ளார்.

காந்தி வாழ்ந்த நாடுகளான இந்தியாவிலும் ஆபிரிக்காவிலும் அவரது கொள்கை கைவிடப்பட்டுவிட்டது. காந்தி போதித்த அகிம்சை இன்று நடைமுறைக் கொவ்வாதது என அநேகர் கருதுகின்றனர்.

ஆனால் இன்று வன்முறைகளினால் வன்முறைகளே ஓங்குவதையும், பகையை முடிவுக்குக் கொண்டுவருவதற்குப் பதிலாக அது நீடித்துக் கொண்டுபோவதையும் காண்கின்றோம்.

அரசியலில் மட்டுமல்ல ஆன்மிகத்திலும் காந்தியின் வழி பொருத்தமானதே. அவரது உண்ணாவிரதமும், மௌன விரதமும் சுய பரித்தியாகமும் தனது தவறுகளை ஏற்றுக் கொள்வதும் ஊனியல்பையும் அகந்தையையும் வெல்ல வழியாகும். இந்தக் கஷ்டமும் ஒறுத்தலும் வளர்ச்சிக்கு துணைபுரிகின்றன என்பதும் அவர் எமக்குத்தரும் செய்தியாகும் என மேலும் அவர் குறிப்பிட்டார்.

## திருச்சபையாக இருப்பதில் மாற்று முறைகள் பற்றி ஆய்வு

சமூகங்களின் கூட்டுறவாக இருப்பது கிறிஸ்தவ மனப்பாங்கின்படி வாழ திருச்சபைக்குத் துணைபுரியுமென, ஆசியாவில் திருச்சபை எப்படி இருக்க வேண்டுமென ஆராய்வதற்கு தாய்லாந்தில் கூடிய 10 நாடுகளின் பிரதிநிதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

ஆசிய திருச்சபையின் புதிய அமைப்பில் குருக்கள், கன்னியர், பொதுநிலையினரின் பங்கில் என்ன மாற்றம் ஏற்படுமெனவும் ஆராயப்பட்டது.


மேற்படி கூட்டம் ஆசிய ஆயர் பேரவையின் பொது நிலையினர் அலுவலகத்தினால் நடத்தப்பட்டது.

## பிலிப்பைனின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அக்வீனோ தாம் அடுத்த முறை போட்டியிடப் போவதில்லை எனக் கூறியிருந்தமையால் அவரது பெயர் வாக்கெடுப்பில் இடம்பெறவில்லை.

## 9ஆம் ஆண்டு நினைவு தினம்



சூசைபபிள்ளை சிமாம்பிள்ளை
தோற்றம் 06–06–1903
மறைவு 23–11–1982

நெஞ்சம் மறக்கவில்லை—ஐயா
நின் நினைவுகள் தேயவில்லை
நிமலன் நிர்மல வீடேற
நித்தம் வேண்டுகின்றோம்.

பிரிவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பூட்டப்பிள்ளைகள்
5/3 பிறஸ் லேன்,
யாழ்ப்பாணம்.

## நினைவாலயம்....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

''உங்களுக்கு வேறு பொருட்கள் கிடைக்கவில்லையா? அத்தான்'' என்றாள் அனிதா. உடனே பிரஸன்னா ''இது தான் சரியான பரிசு அனிதா! என் ஏமாற்றத்தைக் காட்ட வேறு வழி இல்லையே? ஆனால் இது ஏமாற்றத்தின் சின்னமல்ல. உலக மகா காவியம். உலகின் அதிசயங்களில் ஒன்று'' என்றான். உடனே அனிதா பிரஸன்னாவைப் பார்த்து ''உங்கள் காதலியின் படம்தான் பர்ஸில் வைத்துக் கொண்டு இருக்கிறீர்களே? அவள் உங்களை ஏமாற்றி விட்டாளா? என்றாள். அவன் விழிகளில் நீர் முட்டியது. உடனே அவன் ''என் உள்ளத்தில் இருந்தது அனிதாதான். பர்ஸில் இருந்தது எனது நண்பன் நாடகத்தில் பெண்வேடம் பூண்டு என் காதலியாக நடித்தது. சென்றவாரம் தீராத காய்ச்சலால் போய்விட்டான். அவனின் நினைவாக வைத்துள்ளேன்'' என்றான். நாக்கைக் கடித்த அனிதா ''என்னிடம் சொல்லவில்லையே'' என்றாள் ஆதங்கத்துடன். ''உன்னைத் தமாஷாக அழவிட நினைத்தேன். இன்று நான் ஊமை கண்ட கனவாக அழுகிறேன். ஆனால் நான் என் உள்ளத்தைத் திறக்கமுன் உன்விசயம் தெரிந்துவிட்டது'' என்றான். ''என் விஷயமா'' என்று ஆவலுடன் கேட்டாள் அனிதா. முதல் நாள் என்னுடன் நீ பழகியவிதத்திலும் பின்னைய நாள் நீ என்னுடன் பழகிய விதத்திலும் வேறுபாடு. கடிதம் எழுத பேனாவைத் தேடினேன். உன் கைப்பையில் எனக்குக் கிடைத்தது பாபுவின் கடிதம்தான். அவளால் பதில் பேச முடியவில்லை. தொடர்ந்து அவன் அதைப் படித்தபின் தான் என்னால் ஒரு முடிவுக்கு வர முடிந்தது. இல்லாவிட்டால் நான் திருமண விடயங்களுக்கு ஏற்பாடு செய்துவிட்டுத்தான் சென்றிருப்பேன் என்று கூறி அங்கு நிற்கமுடியாதவனாகஅறையை விட்டு எழுந்து வெளியேவந்தான் பிரஸன்னா. அனிதாவுக்குதான் அவசரப்பட்டு விட்டோமோ என்ற தவிப்பு அவள் மனதில் தோன்றி வதைத்தது. அவள் பார்வையில் காதல் ஓவியமான ''தாஜ்மகால்'' பட்டதும் மனமொத்த தம்பதியரின் வாழ்க்கை இன்று காவியமாகி விட்டதை உணர்ந்தாள். அந்தத் தவிப்பு மெல்ல அகன்றது.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**